குறள் வழி

திருக்குறள் முற்றோதல் மாத மின்னிதழ்

திருவள்ளுவராண்டு 2054 டிசம்பர் (கார்த்திகை)-2023 மலர்: 1 இதழ்: 3

உள்ளே..

- திருக்குறள் நினைவாற்றல் உத்திகள் –முனைவர். அ.ஆறுமுகம்
- திருக்குறள் பயிற்சி ஆசுமை –திரு. அ.கோபிசிங்
- மாவட்டத் திருக்குறள் செயல்பாடுகள்
- திருக்குறள் நூல்கள் அறிவோம்







உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின்
"குறள் வழி" மாத இதழின் அச்சுப் பிரதிகள் வழங்குதல்

அறம் சார்ந்த உங்கள்
தொழில் செழிக்க **உங்கள்**
விளம்பரம் திருக்குறள்
புரவலராக இங்கு
இடம்பெறலாம்

தொடர்புக்கு

Email:

Kural.Mutrothal@gmail.com

WhatsApp:

+91 7305571897

“குறள் வழி” மாத இதழ்

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் செய்திகளை, செயல்பாடுகளை, நிகழ்ச்சிகளை, திருக்குறள் சார்ந்த உலக முன்னெடுப்புகளை, பரப்புரைகளை தாங்கி மாதம் ஒருமுறை வரும் இதழ்.

ஆசிரியர் குழு

வலைத்தமிழ் ச.பார்த்தசாரதி

அஜய்குமார் செல்வன், சென்னை

மேகா சக்தி பாரதி, கோவை

வி.நிரஞ்சனா, புதுச்சேரி

வி.ஹேமா, திருச்சி

மு.அனு, திருவண்ணாமலை

ஆலோசனைக் குழு

சி.இராஜேந்திரன், *IRS* (ஓய்வு)

இரவி சொக்கலிங்கம்

நவம்பர் 2023 மாத, “குறள் வழி” முதல் மாத இதழ் உங்கள் வாசிப்பிற்கு

- **To Read as a book:** https://issuu.com/kuralvazhi/docs/kuralvazhi-3
- **Magazine Page:** https://www.valaitamil.com/literature_thirukkural_kural-vazhi/
- **To download as PDF:** https://drive.google.com/file/d/1RONoJhDkgqs9il6sLZmprloIKwKeL256/view?usp=sharing

உங்கள் கருத்துகளை எங்களுக்கு எழுத, படைப்புகளை அனுப்ப : kural.mutrothal@gmail.com

Facebook Page to LIKE and SHARE: https://www.facebook.com/groups/2456301715352 51

உங்கள் மாவட்டத்தில், உங்கள் அமைப்பில் நடைபெறும் திருக்குறள் சார்ந்த நிகழ்வுகளை எங்களுக்கு அனுப்பவும். மேலும், இவ்விதழ் குறித்த உங்கள் கருத்துகளை எங்களுக்கு எழுதி அடுத்த இதழில் வாசகர் பகுதியில் இடம்பெறச் செய்யவும்.

உள்ளே...

1. ஆசிரியர் பக்கம்
2. உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் - என்ன செய்கிறது?
3. திருக்குறள் முற்றோதல் பயிற்சி தொடக்க விழா - முதல் நிகழ்வின் மறுபதிவு..
4. மாவட்டத் திருக்குறள் செயல்பாடுகள்
    - 4.1. அரியலூர் மாவட்டம்
    - 4.2. கன்னியாகுமரி மாவட்டம்
    - 4.3. திருவண்ணாமலை மாவட்டம்
    - 4.4. திருச்சி மாவட்டம்
    - 4.5. பெரம்பலூர் மாவட்டம்
    - 4.6. தர்மபுரி மாவட்டம்
    - 4.7. சிவகங்கை மாவட்டம்
    - 4.8. நீலகிரி மாவட்டம்
    - 4.9. திருநெல்வேலி மாவட்டம்
    - 4.10. செங்கல்பட்டு மாவட்டம்
    - 4.11. காஞ்சிபுரம் மாவட்டம்
    - 4.12. தேனி மாவட்டம்
    - 4.13. விருதுநகர் மாவட்டம்
    - 4.14. புதுச்சேரி
5. திருக்குறள் நினைவாற்றல் உத்திகள் - முனைவர். அ.ஆறுமுகம்
6. திருக்குறள் பயிற்சி ஆளுமை: திருக்குறள் தூயர் அ.கோபிசிங், தஞ்சாவூர்
7. திரும்பிப்பார்க்கிறோம்: சென்ற இதழ் குறித்த பின்னூட்டம்
8. நவில்தொறும் நூல்நயம்
9. திருக்குறள் தற்சார்பு
10. திருக்குறள் நூல்கள் வழங்கிய மாவட்டங்களின் விவரம்
11. திருக்குறள் நூல்கள் அறிவோம்..
12. திருக்குறள் புரவலர்களுக்கு நன்றி!

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம்
அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 1330 திருக்குறள் இலவச மனனப் பயிற்சி
(வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்களுக்கும் பயிற்சி சான்றிதழும்,
அரசின் முற்றோதல் திட்டத்தில் பங்கேற்க வாய்ப்பும்)
மாவட்டப் பயிற்சியாளர்கள்
தலைமைப் பயிற்சியாளர்கள்
அனைத்து மாவட்டங்களுக்கும் மாவட்டப் பயிற்சியாளர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்.
தேவை: மாவட்ட அளவில் திருக்குறள் முற்றோதல் பயிற்றுவிக்க ஆர்வமும், அனுபவமும் உள்ள பயிற்சியாளர்கள், புரவலர்கள்.
மாவட்டத்திற்கு 2000 திருக்குறள் நூல்கள் வீதம் ஆண்டுக்கு 80000 திருக்குறள் நூல்களை
அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இலவசமாக வழங்குவோர்: உலகத் தமிழ் வளர்ச்சி மன்றம், USA
ஒருங்கிணைப்பாளர்கள்
பயிற்சி விவரங்களுக்கு
E-Mail: kural.mutrothal@gmail.com
Web: https://Thirukkural.ValaiTamil.com
Whatsapp: +917358644673

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கீழ்காணும் பதாகையை உங்கள் அமைப்பின் இலச்சினை (Logo) அல்லது பெயர் போட்டு வடிவமைத்து உங்கள் மாவட்ட நிகழ்ச்சிகளில். பயன்படுத்தவும்.

ஆசிரியர் பக்கம்

தமிழ் உறவுகளுக்கு அன்பான வணக்கம்,

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் மாதாந்திர செய்தி இதழாக "குறள் வழி" மின்னிதழ் மூன்றாவது இதழின் வழியே உங்களுடன் உரையாடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இதுவரை தமிழ்நாட்டின் 38 மாவட்டங்கள், பாண்டிச்சேரி, காரைக்கால் ஆகிய 40 மாவட்டங்களில் 32 மாவட்டங்களுக்கு 32 ஆயிரம் திருக்குறள் நூல்கள் அனுப்பப்பட்டு, நூல்களை மாவட்ட ஆட்சியர், முதன்மைக் கல்வி அலுவலர், தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் போன்றோரைக் கொண்டு அரசுடன் இணைந்து அரசுப்பள்ளி மாணவர்களுக்கு நூல்கள் சென்று சேர்ந்துள்ளது. திருக்குறள் முனுசாமி அவர்களது உரையுடன் வழங்கப்பட்ட இந்த நூலை மேலும் சிறிது அளவு பெரிதாகவும், திருக்குறள் ஒரு பக்கத்திலும், பொருள் எதிர் பக்கத்திலும் இடம்பெறவைத்து, அச்சுப்பிழைகளைக் களைந்து, முற்றோதல் செய்யும் படிநிலை வழிகாட்டல்களை சேர்த்து மெருகேற்றி அடுத்த பதிப்பு நூல் வெளியிடப்படவிருக்கிறது.

மேலும் 9 மாவட்டங்களுக்கு 9000 நூல்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டு அங்கு முறையான இயக்க ஒருங்கிணைப்பாளர் அடையாளம் காணப்பட்டுள்ளது. விரைவில் நூல்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருக்குறளில் ஆர்வம் இல்லாதவர்களை திருக்குறளில் தன்னார்வலர்களாக கொண்டுவரமுடிவதில்லை. திருக்குறள் முற்றோதல் முடிக்காதவர்கள் முழு ஈடுபாட்டோடு திருக்குறள் பயிற்சியளிக்க முடிவதில்லை. எனவே திருக்குறள் முற்றோதல் ஆசிரியர் பயிற்சியை நெறிப்படுத்தி, தரப்படுத்தி உருவாக்குவது என்று பல்வேறு பணிகளை அனுபவம் வாய்ந்த குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

அதிக பயிற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் இரு முன்னெடுப்புகளை இதுவரை செய்துள்ளோம்.

1. திருக்குறளை வார்த்தை பிரித்து எளிதாகப் படித்து மனப்பாடம் செய்யும் வகையில் ஒலி வடிவம், குறள் வரிகளை தமிழ், ஆங்கிலம் எழுத்துடன் கூடிய 133 காணொளிகள் உருவாக்கப்பட்டு பொதுவெளியில் பகிரப்பட்டுள்ளது. இதை அனைத்து ஆசிரியர்களும் பயன்படுத்திக்கொள்ளலாம். ஒவ்வொரு மாணவருக்கு ஒலிப்பதிவை இனி உருவாக்கவேண்டியதில்லை.

2. திருக்குறள் நினைவாற்றல் படிகள் அல்லது திருக்குறள் முற்றோதல் செய்யும் வழிமுறைகளை நம் முன்னோர்கள் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தொகுத்து உரையாடி ஒரு கையேடு ஒன்றை உருவாக்கி இவ்விதழ் முதல் வெளியிடுகிறோம்.

திருக்குறள் பயிற்சியாளரின் பணிகள் எளிமைப்படுத்த இயக்கம் தேவையான தொழில்நுட்பம், வழிமுறைகளை உருவாக்கும். இது அவர்களுக்கு பணிச்சுமையை குறைத்து எண்ணிக்கையை அதிகரிப்பதில் கவனம் செலுத்த வாய்ப்பு ஏற்படுத்தும்.

ஆர்வமுள்ள உலகத் தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்கு திருக்குறள் முற்றோதல் பயிற்சி வழங்க முன்வரவேண்டும். இதன் சேவை தொய்வில்லாமல் தற்சார்பு அடைய உங்கள் அனைவரின் ஒத்துழைப்பும், ஆலோசனையும், வழிகாட்டுதலும், பங்களிப்பும் தேவை. இந்தத் தொலைநோக்கு முயற்சியில் அனைவரும் துணைநிற்க அன்புடன் அழைக்கிறோம். தொடர்ந்து பயணிப்போம். இணைந்து சாதிப்போம். வாழ்த்துகள்.. நன்றி..

வலைத்தமிழ் ச.பார்த்தசாரதி, ஒருங்கிணைப்பாளர்.

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் - என்ன செய்கிறது?

உலகப் பொதுமுறையாம் திருக்குறளை இளம் வயதிலேயே மாணவ மாணவியர் மனப்பாடம் செய்தால் வாழ்நாள் முழுவதும் மனத்தில் நிற்கும். "இளமையில் கல்வி பசுமரத்தாணி" என்பது பழமொழி.

திருக்குறள் மனித இனத்தின், குறிப்பாக தமிழர்களின் மாபெரும் பொதுவுடைமைச் சொத்து. திருக்குறள் நெறிகள் பரவப்பரவ, அறம் பரவும். தமிழ் மொழிப்பயிற்சியும், மாணவர்களுக்குக் கிடைக்கும். அறமும், மொழியும் வளரும். மேலும் அறமும், திறனும், ஒருங்கே வாய்ந்த இளைஞர் சமுதாயம் உருவாகிட வலுவான அடித்தளமாக திருக்குறள் மனனம் அமையும். சமுதாயத்தில் நல்லிணக்கமும், மனித நேயமும் வளரும்.

திருக்குறள் பொருள் பொதிந்த, பொருள் நிறைந்த, இகலில்லா இன்ப வாழ்க்கையின் கையேடு. கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கும் மேலாக, 1330 திருக்குறளையும் மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் மாணவ மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு சான்றிதழ் மற்றும் பரிசுத் தொகை வழங்கி வருகிறது. திருக்குறள் முற்றோதல் செய்யும் 70 மாணவர்களுக்கு, 2021 ஆம் வருடம் வரை, தலா ரூ.10000/- திருவள்ளுவர் தினத்தன்று அரசு வழங்கி வந்தது.

இந்த சூழ்நிலையில் தமிழக அரசு 2022 ஆம் ஆண்டு சட்டசபையில் 70 மாணவர்கள் என்ற உச்சவரம்பை நீக்கியது.பரிசுத்தொகையும் உயர்த்தப்படும் என்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் சட்டசபையில் அறிவித்தார். {தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை. தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கை - 46 அறிவிப்புகள் (2021-2022)}. கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இதுவரை ஆண்டுதோறும் பரிசு பெறும் மாணவர்களின் வயதைப் பார்த்தால் 95 விழுக்காடு மாணவ/மாணவியர் 14 வயதுக்குட்பட்டே இருக்கிறார்கள். ஆறு/ஏழாம் வகுப்புக்குள் மனனம் செய்துவிட்டால், பிறகு மேல் வகுப்புகளில் பொருளுணர்ந்து படிக்க ஏதுவாக இருக்கும். தனிவாழ்வில் நிறைவான வாழ்க்கை வாழவும், சமுதாய பிரச்சனைகளை திருக்குறள் துணையுடன் எதிர் கொள்ளவும், இளவயதிலேயே 1330 அருங்குறள் மனனம் பயனுள்ளதாக இருக்கும்.

இந்தப் பின்புலத்தில், வலைத்தமிழ், வள்ளுவர் குரல் குடும்பம், சர்வீஸ் டு சொசைட்டி என்ற மூன்று அமைப்புகளும் இணைந்து, தமிழ்நாடு, புதுச்சேரியில் ஏற்கனவே திருக்குறள் முற்றோதல் பயிற்சியளிக்கும் ஆசிரியர்களை ஒருங்கிணைத்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஒருங்கிணைப்பாளர், ஒரு பயிற்சியாளர், ஒரு புரவலர் அடையாளம் கண்டு அக்டோபர் 2021ல் தொடங்கப்பட்டது இவ்வியக்கம். எம்முடன் உலகத் தமிழ்வளர்ச்சி மன்றம், USA இணைந்து ஒரு மாவட்டத்திற்கு 2000 திருக்குறள் நூல்கள் வீதம் ஒரு ஆண்டுக்கு 80,000 திருக்குறள் நூல்களையும், ஐந்து ஆண்டுகளுக்கு மொத்தம் 4 லட்சம் நூல்களையும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக வழங்க முன்வந்தது.

உங்கள் மாவட்ட திருக்குறள் பரப்புரை தேவைகளுக்கு பொறுப்பேற்க திருக்குறள் புரவலர்களை அழைக்கிறோம்.

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் நன்கொடை பெறுவதில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த மாவட்டத்தை சார்ந்த திருக்குறள் முற்றோதல் பயிற்சியாளர் ஒருவரை அடையாளம் கண்டு அல்லது உருவாக்கி பகுதிநேர-முழுநேர திருக்குறள் பயிற்சி வழங்க ஊக்கத்தொகை, மாணவர்களுக்கு சான்றிதழ் அச்சடித்தல், "குறள் வழி" இதழுக்கு விளம்பரம் கொடுத்து இலவச இதழ்களை அனுப்ப உதவுதல் என்று சுயமாக உங்கள் மாவட்டத்தில் பொறுப்பேற்க அழைக்கிறோம். ஊர் கூடி பயணிக்கும் திருக்குறள் தேரை இழுக்க வடம் பிடிக்க வாருங்கள். எமக்கு அறம் சார்ந்த வணிகர்கள் அவர்கள் தொழில்களை விளம்பரம் செய்து உங்கள் மாவட்டத்தில் திருக்குறள் பரப்புரைக்கு உதவலாம்.

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் குறிக்கோள்கள்

1. தமிழ்நாடு அரசின் புதிய அறிவிப்பைத் தொடர்ந்து, **1330** திருக்குறளையும் மனனம் செய்யும் மாணவர்களை அதிக அளவில் உருவாக்கி, அறம் சார்ந்த, பொருள் வளம்மிக்க நல்லிணக்க சமுதாயத்தைக் கட்டமைத்தல்.

2. பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் இணைந்து செயல்பட்டு ஆர்வமும் மனனம் செய்யும் திறனும் மிக்க மாணவர்களை இனம் கண்டு, அவர்களுக்குத் திருக்குறள் முற்றோதல் மனனப் பயிற்சியை **9**-ஆம் வகுப்புக்குள் அளித்தல். அவர்களுக்கு அரசு சான்றிதழ் மட்டுமின்றி உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் "திருக்குறள் முற்றோதல்-இளநிலை" சான்றிதழ் வழங்குதல்.

3. வயதுக்கு ஏற்ப, முற்றோதல் முடித்த அனைவரும் கல்லூரி செல்வதற்கு முன்பு முழுமையாக குறளின் பொருளை அறிந்துகொள்ள வழிசெய்தல். அதில் நேர்முகத் தேர்வு வைத்து பொருள் உணர்ந்து படித்துள்ளவர்களுக்கு "திருக்குறள் முற்றோதல்-முதுநிலை" சான்றிதழ் வழங்குதல்.

4. திருக்குறள் முற்றோதல் பயிற்றுவிக்க தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தகுதியான அனுபவமும் ஆர்வமும் மிக்க முற்றோதல் முடித்த பயிற்சியாளர்களை அடையாளம் கண்டு பயிற்சியாளராகவும், அந்த பயிற்சியாளருக்கு மாதம் ரூபாய் **10000** வழங்க ஒரு புரவலரையும், மாவட்ட ஒருங்கிணைப்பு செய்ய ஒரு ஒருங்கிணைப்பாளரையும் நியமித்தல்.

5. ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் நாளில், திருக்குறள் முற்றோதல் முடித்தவர்கள் அனைவரும் அந்தந்த மாவட்டத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட திருவள்ளுவர் சிலையின் முன் ஒன்றுகூடி, தமிழ் வளர்ச்சித்துறை, மாவட்ட நிர்வாகம் ஆகியவற்றுடன் இணைந்து குழுவாக "திருக்குறள் முற்றோதல்" செய்து, கற்றதை மறந்துவிடாமல் இருக்க வழிசெய்தல்.

6. குறள் முற்றோதல் முடித்த அனைவரின் விவரங்களையும் இணையத்தில் பட்டியலிட்டு, வரிசை எண் கொடுத்து அவர்கள் ஒருங்கிணைந்த வளர்ச்சியை, வெற்றியைப் பெற துணைநிற்றல்.

7. குறள் முற்றோதல் முடித்த அனைவரும் ஒருவருக்கொருவர் துணை நின்று கல்வி, வேலைவாய்ப்பு, மகிழ்ச்சியான, நிறைவான வாழ்க்கையை வாழவும், வேலைவாய்ப்பில், தொழிலில் வெற்றிபெறவும் முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு உரிய உதவிகளைப் பெற துணைநிற்றல்.

திருக்குறள் முற்றோதல் பயிற்சி தொடக்க விழா - மறுபதிவு..

பள்ளிக் கல்வித்துறை மற்றும் உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் இணைந்து நடத்தும் பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கி முற்றோதல் பயிற்சி தொடக்கவிழா, தி.நகர், சென்னை, ஹோலி ஏஞ்சல் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளியில் இன்று (05.12.2022) காலை 9:30 மணிக்கு நடைபெற்றது.

திருக்குறள் நூல்களை இவ்வாண்டு, முதல் மாவட்டமாக சென்னைக்கு வழங்கி **மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி** அவர்கள் 05-12-2022 (திங்கள்கிழமை) அன்று தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினார்.

நன்றி... நன்றி... நன்றி...

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்துடன் இணைந்து, தமிழ்நாட்டு அரசுப்பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக திருக்குறள் நூல்களை வழங்கும் உலகத் தமிழ்வளர்ச்சி மன்ற ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் விஜய் ஜானகிராமன் அவர்களுக்கும், அவருடன் துணைநிற்கும் அனைத்து புரவலர்களுக்கும் நன்றி...

கலைஞர்
100
1924 - 2023
அரியலூர் மாவட்டம்
உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம்
சார்பில்
அரசுப் பள்ளி மாணவர்களுக்கு
இலவசத் திருக்குறள் நூல் வழங்கும் விழா
நாள் : 09.11.2023
வியாழக்கிழமை
இடம் : மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
அரியலூர்

கன்னியாகுமரி மாவட்டம்

15.11.2023 அன்று கன்னியாகுமரி மாவட்டம் கொடுப்பைக்குழி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு திரு. தமிழ்க்குழவி அவர்கள் திருக்குறள் நூல்களை வழங்கினார்.

16.11.2023 அன்று கன்னியாகுமரி மாவட்டம் ஈத்தாமொழி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு திரு. தமிழ்க்குழவி அவர்கள் திருக்குறள் நூல்களை வழங்கினார்.

18.11.2023 அன்று கன்னியாகுமரி மாவட்டம் மகாதனபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு திரு. தமிழ்க்குழவி அவர்கள் திருக்குறள் நூல்களை வழங்கினார்

30.11.2023 அன்று கன்னியாகுமரி மாவட்டம் ஒழுகினசேரி அரசு உயர் நிலைப்பள்ளி மாணவர்களுக்கு திரு. தமிழ்க்குழவி அவர்கள் திருக்குறள் நூல்களை வழங்கினார்.

திருவண்ணாமலை மாவட்டம்

6.11.2023 அன்று உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் மூலம் தமிழ் வளர்ச்சி மன்றம் வழங்கும் திருக்குறள் நூல்கள் திருவண்ணாமலை மாவட்டம் இராயம்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி 10 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி. இ.ரா.செண்பகவள்ளி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

6.11.2023 அன்று உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் மூலம் தமிழ் வளர்ச்சி மன்றம் வழங்கும்திருக்குறள் நூல்கள் திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டம் கல்லணை கீழ்கரீப்பூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டன.

10.11.2023 அன்று உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் மூலம் தமிழ் வளர்ச்சி மன்றம் வழங்கும் திருக்குறள் நூல்கள் திருவண்ணாமலை மாவட்டம் பூதமங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டன.

17.11.2023 அன்று உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் மூலம் தமிழ் வளர்ச்சி மன்றம் வழங்கும் திருக்குறள் நூல்கள் திருவண்ணாமலை மாவட்டம் வேங்கிக்கால்ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டன.

16.11.2023 அன்று திருவண்ணாமலை மாவட்டம் பனைஓலைப்பாடி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு திரு.காமராசு அவர்கள் திருக்குறள் நூல்களை வழங்கினார்.

திருச்சி மாவட்டம்

09.11.2023 அன்று உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் மூலம் தமிழ் வளர்ச்சி மன்றம் வழங்கும் திருக்குறள் நூல்களை திருச்சி மாவட்டம் சிங்காரதோப்பு நடுநிலைப் பள்ளி நல்லாசிரியர் ஜோசப் ஜெயசீலன் பெற்று மாணவ மாணவியர்களுக்கு வழங்கினார். திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பூவை தயாபரன் கலந்து கொண்டார்.

இலவசத் திருக்குறள் நூல்கள் திருச்சி மாவட்ட ஆட்சியர் திரு. மா.பிரதீப் குமார், இ.ஆ.ப அவர்களால் அரசுப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பை உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர், திருமூலநாதன் அறக்கட்டளை நிறுவனர் பூவை தயாபரன் ஏற்பாடு செய்திருந்தார்.

பெரம்பலூர் மாவட்டம்

7.11.2023 அன்று உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் மூலம் தமிழ் வளர்ச்சி மன்றம் வழங்கும் திருக்குறள் நூல்கள் பெரம்பலூர் மாவட்டம் எளம்பலூர் எம்.ஜீ.ஆர்.நகர் அரசு தொடக்கப்பள்ளி மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டன. தலைமை ஆசிரியர், மற்ற ஆசிரியர்கள், அமைப்பு சார்பில் கருப்பையா அவர்கள் கலந்து கொண்டார்.

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரம், அரசு மேல்நிலைப் பள்ளியில் 22.11.2023 அன்று உலக திருக்குறள் முற்றோதல் இயக்கம் சார்பில் திருக்குறள் முற்றோதலுக்காக திருக்குறள் நூல்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. க.செல்வராசு தலைமை வகித்தார். உலக திருக்குறள் முற்றோதல் இயக்க பெரம்பலூர் மையத்தின் சார்பாக திருமாந்துறையைச் சார்ந்த ஓய்வு பெற்ற தமிழாசிரியர் புலவர். முருகேசனார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திருக்குறள் நூல்களை வழங்கி திருக்குறளின் சிறப்பை மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார். "உலகப் பொதுமறையான திருக்குறளில் இல்லாதது எதுவும் இல்லை; வாழ்விற்கு தேவையான அனைத்துக் கருத்துகளையும் திருக்குறள் எடுத்துரைக்கிறது. மாணவர்கள் நாள்தோறும் ஒரு அதிகாரம் என்ற வீதம் மனப்பாடம் செய்தால் விரைவில் 1330 திருக்குறளையும் முற்றோதல் செய்து தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் வழங்கும் பரிசுத்தொகையை வெல்ல முடியும்" என்று ஊக்கப்படுத்தி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

தர்மபுரி மாவட்டம்

16.11.2023 அன்று உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் மூலம் உலகத் தமிழ் வளர்ச்சி மன்றம் வழங்கும் திருக்குறள் நூல்கள் பசியில்லா தர்மபுரி சார்பில் தருமபுரி நகராட்சி நடுநிலைப்பள்ளி, சந்தைப்பேட்டை பள்ளி மாணவ மாணவிகளுக்கு 100 திருக்குறள் புத்தகங்கள் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் திரு. S.P.வெங்கடேஷ்வரன் அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சமூக ஆர்வலர் திரு. வினோத் குமார், வட்டாரக்கல்வி அலுவலர் திரு. மு.ஜீவா, SMC பொறுப்பாளர் திரு.மாதேஸ்வரன், தலைமை ஆசிரியை திருமதி. கு.விஜயலட்சுமி, ஆசிரியர் வ.சௌந்திர பாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்...

சிவகங்கை மாவட்டம்

மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி
(அழகப்பா பல்கலைக்கழக இணைவு பெற்றது – தேசியத் தர மறுமதிப்பீட்டுக் குழுவின் 'B' தகுதி பெற்றது)
சிவகங்கை 630 561
எதிலும் தமிழ் !!

மன்னர் துரைசிங்கம் அரசு கல
(அழகப்பா பல்கலைக்கழக இணைவு பெற்றது – தேசியத் தர மறுமதிப்பீட்டுக்
சிவகங்கை 630 561
தமிழ்வளர்ச்சித் துறை
சிவகங்கை மாவட்டம்

மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்க
(அழகப்பா பல்கலைக்கழக இணைவு பெற்றது – தேசியத் தர மறுமதிப்பீட்டுக் குழுவின் 'B' த
சிவகங்கை 630 561
தமிழ்வளர்ச்சித் துறை
சிவகங்கை மாவட்டம்

நீலகிரி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டம்

22.11.22 அன்று திருநெல்வேலி மாவட்டம் கோவிலம்மாள்புரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

களக்காடு அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 25 திருக்குறள் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி அம்பாசமுத்திரம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி விக்கிரமசிங்கபுரம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி கோடாரங்குளம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பாபநாசம் கீழணை, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கோவில் குளம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மன்னார்கோவில், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மணிமுத்தாறு, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி அயன்சிங்கம்பட்டி தலா 15 புத்தகங்கள் உதவி தொடக்க கல்வி அலுவலர் மூலம் அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர் வசம் வழங்கப்பட்டன.

செங்கல்பட்டு மாவட்டம்

தமிழ் வளர்ச்சித் துறை
செங்கல்பட்டு மாவட்டம்
ஆட்சிமொழிக் கருத்தரங்கம்
2023-2024
நிகழ்ச்சி நிரல்
திருவள்ளுவராண்டு 2054 கார்த்திகை 08
இரண்டாம் நாள்: 24-11-2023 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 3.30 மணிக்கு : தமிழ்த்தாய் வாழ்த்து
வரவேற்புரை : திருமதி க.பவானி
மண்டலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர், சேலம்
தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் (மு.கூ.பொ)
காஞ்சிபுரம், செங்கல்பட்டு
உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் சார்பில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இலவச திருக்குறள் நூல் வழங்குதல் மற்றும் மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு பிறந்த நாள் பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச்சான்றிதழ் வழங்கி தலைமையுரை : திரு. ஆ.ர.ராகுல்நாத் இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்
செங்கல்பட்டு
ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கச் சிறப்புரை : முனைவர் ந.அருள்
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை
சென்னை
கருத்துரை : திருமதி சொ.கற்பகம்
முதன்மைக் கல்வி அலுவலர், செங்கல்பட்டு
திரு. ச.பார்த்தசாரதி
ஒருங்கிணைப்பாளர்
உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம், சென்னை
முனைவர் சி.செயந்தி
உதவிப் பேராசிரியர்
இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக் கல்லூரி
செங்கல்பட்டு
நன்றியுரை : திரு. ஏ.பொன்னுரங்கம்
உதவியாளர், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்
அலுவலகம், காஞ்சிபுரம்
எங்கும் தமிழ்!
எதிலும் தமிழ்!!
கலைஞர்
100
1924 - 2023
தமிழ் வளர்ச்சித் துறை
செங்கல்பட்டு மாவட்டம்
ஆட்சிமொழிப்
பயிலரங்கம் - கருத்தரங்கம்
2023-2024
திருவள்ளுவராண்டு 2054 கார்த்திகை 07, 08
23-11-2023, 24-11-2023 வியாழன், வெள்ளி
இடம் : மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், செங்கல்பட்டு.
பெருந்தகையீர் வணக்கம்.
அங்கமெல்லாம் தமிழ் சுமந்த அழகுக்கு
செங்கை மாநகரில் நடக்கும் வண்ணமிகுத் திருவிழா
மைல் கணக்கில் நடந்து வரும் நரல் நதி போல்
வருடக் கணக்கைக் கடந்து வரும் வண்மொழியாம்
செம்மொழித் தமிழை உயர்த்திப் பிடிக்கும் உரையரங்கத் தனி விழா!
பனி உறைந்த பூவாக, கனி மறைந்த விதையாக
தமிழ் நிறைந்த இதயங்களைத் தட்டி எழுப்பும் தமிழ் ஒலி விழா!
வண்ணப் பறவைகளாய்
வந்துசேரும் அலுவலர்களுக்கு
எண்ணக் கனவுகளாய்
அள்ளித் தமிழை நிறைக்கும்
ஆட்சிமொழிப் பெருவிழா!
ஏரோடும் மண்ணில் வேரோடும் விழுதோடும் பிறந்து
தமிழைச் சீரோடும் சிறப்போடும் வளர்த்து மகிழ்ந்த
முத்தமிழறிஞர் கலைஞரின் முதல் நூற்றாண்டு எழில் விழா!
தமிழ்நாட்டிலுள்ள நூறு கல்லூரிகளில்
தழைக்கவுள்ள ஆட்சிமொழிக் கருத்தரங்கின் அணி விழா!
கண்டு, கேட்டு, உண்டுயிர்த்து, உற்றறிந்து இருநாள்கள் முழுவதும்
ஆட்சித் தமிழை உளர்வோடு கேட்க வாருங்கள்!
முனைவர் ஔவை ந.அருள்
இயக்குநர் தமிழ் வளர்ச்சித்துறை

27.11.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம் சென்னேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

28.11.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம் மாமண்டூர் வடபதி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

28.11.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம் L.N.புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

28.11.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம் வெண்பாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

28.11.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம் மாமண்டூர் தென்பதி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

28.11.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம் வையாவூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

29.11.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம் டி.இ.எல்.சி. நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

30.11.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம் சூனாம்பேடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

காஞ்சிபுரம் மாவட்டம்

28.11.2023 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் பழையனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் நூல்கள் வழங்கப்பட்டன.

தேனி மாவட்டம்

29.11.2023 அன்று தேனி மாவட்டம் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் நடைபெற்ற ஆட்சி மொழிக் கருத்தரங்கு விழாவில் மாணவ மாணவிகளுக்கு உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் சார்பாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் திருக்குறள் நூல்களை வழங்கினார்.

விருதுநகர் மாவட்டம்

30.11.2023 அன்று விருதுநகர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்கள் அரசு பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு திருக்குறள் நூல்களை வழங்கினார்.

செப்டம்பர் 7, 2023 உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் ஒருங்கிணைப்பில், உலகத் தமிழ் வளர்ச்சி மன்றம் வழங்கிய இலவசத் திருக்குறள் நூல் அரசுப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் வி.பி.ஜெயசீலன் ஐ.ஏ.எஸ் மூலம் வழங்கப்பட்டது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜசேகர் நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பு செய்தார்.

புதுச்சேரி

புதுச்சேரி தீரர் சத்தியமூர்த்தி அரசு மேல்நிலைப்பள்ளி திருக்குறள் முற்றோதல் பயிற்சி தொடங்கப்பட்டது. 15 மாணவர்கள் பயிற்சியில் இணைந்தனர். அனைவருக்கும் திருக்குறள் நூல் வழங்கப்பட்டது.

திருக்குறள் நினைவாற்றல் உத்திகள்: (10 படிகள்)

முனைவர். அ.ஆறுமுகம்

முதல் படி:

முன்னுரை: தற்போது தமிழ் அமைப்புகள் பலவும் திருக்குறளில் பல்வகைப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தி வருகின்றன. ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் மனப்பாடம் செய்து இளமையிலேயே கவனக நிகழ்ச்சிகள் நடத்துபவரும் உள்ளனர். இவர்களையெல்லாம் பார்க்கும் போது திருக்குறள் ஆர்வலர் பலருக்கும் நாமும் அவ்வாறு திருக்குறள் முழுமையும் மனப்பாடம் செய்து ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழுவது இயல்பே. இத்தகு எண்ணங்கொண்ட திருக்குறள் ஆர்வலர்கட்கும், இளைஞர்கட்கும் பயன் தரும் வகையில் அதற்கான வழிகளும் செய்திகளும் தொகுத்துத் தரப் பெறுகின்றன.

நினைவாற்றல்: திருக்குறள் முழுவதையுங் கற்று நினைவில் இருத்த வேண்டும் என்ற ஆர்வம் இருக்க வேண்டும். ஆர்வத்துடன் திருக்குறள் நூலொன்றைச் சொந்தமாக வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். முதலில் இருந்து முடிவு வரை ஆர்வம் தூண்டும்போது படியுங்கள். மேலும் படிக்க வேண்டும் என்ற உணர்வு உண்டாகும். எண்ணியர் திண்ணியராயின் எண்ணிய எண்ணியாங் கெய்தலாம் என்பது வள்ளுவர் வழி. எனவே, முயன்றால் வெற்றி பெறலாம் என்ற முழு ஆர்வத்துடன் தொடங்குங்கள். முதலில் நூற்று முப்பத்து மூன்று அதிகாரத் தலைப்புகளையும் வரிசையாக மனப்பாடஞ் செய்யுங்கள். எண்ணுடன் அதிகாரத் தலைப்பினைச் சொல்லுமளவு பயிற்சி செய்து கொள்ளுங்கள். 40 ஆவது அதிகாரம் கல்வி, 74ஆவது அதிகாரம் நாடு என எண்ணுடன் அதிகாரத் தலைப்பினை நினைவில் நிறுத்துங்கள். உங்களை நீங்களே கேள்வி கேட்டு விடைகளைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். முடிந்தால் உங்கள் நண்பர் ஒருவருக்கும் இவ்வார்வத்தைத் தூண்டி இருவரும் போட்டி இட்டுக் கொண்டு படித்தால் ஒருவரை ஒருவர் சோதித்து ஆற்றலை வளர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு முதற்படியாக அதிகாரத் தலைப்புகள் முழுவதையும் எண்ணுடன் நன்கு மனப்பாடம் செய்து கொள்ளுங்கள். பிற படிப்புகளுக்கெல்லாம் இதுவே முதற்படி என்பதைப் பயிற்சியின் போது நன்கு உணர்ந்து கொள்வீர்கள்.

இரண்டாம் படி:

அதிகாரத் தலைப்புகள் அனைத்தையும் மனனம் செய்தவுடன் முதல் அதிகாரத்திலிருந்து குறட்பாக்களை மனனம் செய்யத் தொடங்குங்கள். நானூறு பக்க அளவுள்ள ஏட்டினை வாங்குங்கள். முதற்படியாக மனனம் செய்த அதிகாரத் தலைப்புகளை வரிசையாக எண்ணுடன் நினைவுபடுத்தி எழுதுங்கள். சரிபார்த்துக் கொள்ளுங்கள். பின்னர் குறட்பாக்களை மனனம் செய்யுங்கள். ஒரு நாளைக்கு ஓர் அதிகாரம் மனனம் செய்யலாம். உங்கள் ஆற்றலுக்கேற்ப அளவை வரையறை

செய்து கொள்ளுங்கள். இம்முறையிலிருந்து தளரமாட்டேன் என்ற உறுதியுடன் தொடருங்கள். காலையில் மனனம் செய்த பகுதியை இரவு வரை ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் சொல்லிப் பார்த்து பயிற்சி செய்து கொள்ள வேண்டும்.

மனனம் செய்த குறட்பாக்களை உங்கள் குறிப்பேட்டில் ஒவ்வொரு பக்கத்துக்கும் ஒவ்வோர் அதிகாரமாக அன்றன்றே எழுதுங்கள். அதிகாரத் தலைப்பு, குறள் வரிசை எண், தொடங்கும் சீர், ஈற்றுச் சீர் இவற்றை எழுதினாலே போதும். ஏனெனில் தொடங்கும் சீரைப் பார்த்தவுடன் குறள் முழுதும் இயல்பாகவே உங்களுக்கு நினைவில் வந்துவிடும் அல்லவா? இவ்வாறு எழுதும் ஏட்டுப்படி மீண்டும் திருப்பிப் பார்த்து ஆற்றலை வளர்த்துக் கொள்ள உற்ற துணையாகும். முழுவதும் நிறைவு பெற்றவுடன் இக்குறிப்பேட்டின் பயனை அறிந்து நீங்களே பெருமை அடைவீர்கள். உழைப்பின் உவகை உங்கள் முகத்தில் குடி கொண்டிருக்கும்.

மூன்றாம் படி:

ஒவ்வோர் அதிகாரமாக மனனம் செய்யும் போது இரண்டாம் அதிகாரம் மனனம் செய்தவுடன் முதல் அதிகாரத்தையும் சேர்த்துச் சொல்லி நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இம்முறையில் நூற்று முப்பத்து மூன்றாவது அதிகாரம் மனனம் செய்யும்போது திருக்குறள் முழுவதையும் சொல்லிப் பார்க்க வேண்டிய நிலை வந்துவிடும். அதற்கு ஆகும் நேரம் ஒரு மணி நேரம்தான் என்பதைப் பின்னர் நீங்களே அறிவீர்கள். பன்முறை திரும்பத் திரும்ப நீங்களே சொல்லிப் பார்த்துக் கொண்டிருப்பதால் திருக்குறள் முழுமையும் உங்கள் நினைவில் பதிந்திருக்கும். எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் எந்தக் குறளைக் கேட்டாலும் சொல்லக்கூடிய வலிவான நினைவாற்றல் உங்களிடம் வளர்ந்திருக்கும். போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கு இத்தகைய ஆற்றல் பல்வேறு பரிசுகளையும் வெற்றிகளையும் குவித்துத் தரும்.

நான்காம் படி:

தற்போது திருக்குறளின் அதிகாரத் தலைப்புகள் எண்ணுடன் தெரியும். திருக்குறள் முழுவதும் தெரியும். எண் சொன்னால் குறள் சொல்வதற்குரிய படியை இப்போது பார்ப்போம் இதற்கு மீண்டும் அதிகாரத் தலைப்புகள் எண்ணுடன் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். ஒவ்வோர் அதிகாரத்திலும் முதற்குறள் கடைசிக்குறள் இவற்றை நன்கு நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். முதல் அதிகாரத்திலிருந்து நூற்று முப்பத்து மூன்றாம் அதிகாரம் வரை ஒவ்வோர் அதிகாரத்தின் முதற் குறளையும் கடைசிக் குறளையும் சொல்லிப் பாருங்கள். போதுமான பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள். 411ஆவது குறள் என்றால் 42ஆவது அதிகாரமாகிய 'கேள்வி' யின் முதற்குறள் எனக் கொள்ள வேண்டும். 740ஆவது குறள் என்று சொன்னால் 74ஆவது அதிகாரமாகிய 'நாடு' என்னும் அதிகாரத்தின் கடைசிக் குறள் ஆகும். இதற்கான பயிற்சியினைத் தொடருங்கள்.

இவ்வாறு மீண்டும் மீண்டும் பயில்வதனால் நினைவாற்றலில் வலிவேற்படுகிறது. இவ்வலிவை வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் வளர்த்துக் கொண்டேயிருக்க வேண்டும். இடையில் தொய்வு ஏற்பட்டாலும் அத்தொய்வினை அகற்றிப் பயிற்சியைத் தொடர வேண்டும்.

ஐந்தாம் படி:

இப்போது அதிகாரத் தலைப்புடன் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களும் தெரியும். ஒவ்வோர் அதிகாரத்தின் முதற்குறளும் கடைசிக் குறளும் கேட்டவுடன் சொல்லத் தெரியும். அதாவது 1, 0 முடியும் எந்தக் குறளைக் கேட்டாலும் விடையளிக்க இயலும். இதர எண்களுக்குரிய குறட்பாக்களை எப்படி நினைவுக்குக் கொண்டு வருவது?

ஒவ்வோர் அதிகாரத்தின் 5 ஆம் குறளையும் பயிற்சியின்மூலம் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இப்பயிற்சியால் 1,5,0 இவற்றில் முடியும் குறட்பாக்களை எப்போது கேட்டாலும் சொல்ல இயலும். 25,111,205 என எண்களைச் சொல்லிக் குறட்பாக்களை கேட்டால் உடன் விடையளிக்க இயலும். இதன் உதவியுடன் பிற எண்களில் முடியும் குறட்பாக்களையும் எளிதில் நினைவுக்குக் கொண்டு வந்துவிடலாம். எவ்வாறு என்பதைப் பார்ப்போம்.

ஆறாம் படி:

தற்போது ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களும் அதிகாரத் தலைப்பு எண்ணுடன் தெரியும். 1,5,0 இவற்றில் முடியும் குறட்பாக்களுக்குரிய எண்களைச் சொன்னால் குறளைச் சொல்லத் தெரியும். எந்த எண் கூறினாலும் குறளைச் சொல்வதற்குரிய பயிற்சியை இப்போது பார்ப்போம்.

494 ஆவது குறள் என்று சொன்னால் 50 ஆவது அதிகாரமாகிய 'இடனறிதல்' என்னும் அதிகாரத்தின் 4ஆம் குறட்பா என்று நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும். 491ஆவது குறள் தொடங்கற்க எனத் தொடங்கும் குறள் என்பது முன்னரே தெரியும். தொடர்ந்து 492, 493 ஐச் சொல்லி வந்தால் 494வது குறட்பா,

'எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்'

என்று கூறிவிட முடியும். 637 ஆம் எண்ணுள்ள குறட்பா என்று கேட்டால் 64 ஆவது அதிகாரமாகிய அமைச்சு என்னும் அதிகாரத்தின் ஏழாவது குறள் என்பது நினைவுக்கு வரும். 635 ஆவது குறள் அறனறிந்து.... துணி என்று முன்பே தெரியும். அதைத் தொடர்ந்து சொன்னால் 637ஆவது குறள்,

'செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்(து)
இயற்கை அறிந்து செயல்'

என்பது நினைவுக்கு வந்துவிடும். இத்தொடர் சிந்தனை, பயிற்சியால் எளிதில் அமைந்துவிடும்.

1038ஆவது குறள் என்று சொன்னால் 104ஆவது அதிகாரமாகிய உழவு என்னும் அதிகாரத்தில் 8ஆவது குறள். 1035 இரவார் எனத் தொடங்கும் குறள் என்பது முன்னரே தெரியும். தொடர்ந்து 1036, 1037 சொல்லி வந்தால் 1038 ஆவது குறள்,

'ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு' எனக் கூற இயலும்.

இப்பயிற்சியால் தற்போது எந்த எண்ணைக் கூறிக் குறளைக் கேட்டாலும் கூற இயலும். இவ்வாறு முயன்று பெற்ற ஆற்றலை மறதி வெள்ளத்தில் இழந்து விடலாகாது. கைப்பொருளை எவ்வாறு பாடுபட்டுக் காப்பாற்றுகிறோமா அவ்வாறே இவ்வாற்றலையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் காலை முதல் இரவு படுக்கப் போகும்வரை சிந்தனைக்கு ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் முதற் குறளிலிருந்து கடைசிக் குறள்வரை சொல்லிப் பார்த்துக் கொள்ள வேண்டும். நாம் மனதுக்குள் 30 ஆவது அதிகாரம் நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் போது வேறு பணியில் கவனம் செலுத்த வேண்டி இருக்கும். அப்போது நினைவுபடுத்தலை 30ஆவது அதிகாரத்தில் நிறுத்தியுள்ளோம் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு மீண்டும் வாய்ப்புக் கிடைக்கும்போது விட்ட இடத்திலிருந்து நினைவாற்றலைத் தொடர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறு இடையிடையே கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டால் ஒவ்வொரு நாளும் முழுமையாகத் திருக்குறளை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளும் வாய்ப்பு தொடரும். தொடர்ந்து கொண்டேயிருக்க வேண்டும்.

ஏழாம் படி:

தற்போது உங்களுடைய ஏட்டில் 133 அதிகாரத் தலைப்புகளும், எண்களுடன் முதற்சீரும் இறுதிச் சீருமாக 1330 குறட்பாக்களும் எழுதப் பெற்றிருக்கின்றன. தங்கள் கையில் திருக்குறள் புத்தகத்தைத் தவிர திருக்குறள் நினைவேடு ஒன்றும் உருவாகியிருக்கிறது. இந்நினைவேட்டினைக் கையில் வைத்துக் கொண்டு வரிசை எண்கள் சிலவற்றை நீங்களே சொல்லி அவற்றிற்குரிய குறட்பாக்களை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். கூறியது சரியா என நினைவேட்டின் மூலம் சரிபார்த்துக் கொள்ளுங்கள். நண்பர்களைக் கேட்கச் செய்வது இன்னும் சிறந்த பயனை அளிக்கும். இருப்பினும் நமக்கு நாமே சோதித்துக்கொள்வதுதான் சிறந்த பயனைத் தரும். எப்போதும் நண்பர்கள் அருகில் இருக்க மாட்டார்கள். இருந்தாலும் ஆர்வத்துடன் நம் முயற்சிக்கு உதவுபவர்களாக அமைய மாட்டார்கள். ஆர்வம் காட்டும் நண்பர்கள் அமைந்தால் பெரும் பேறுதான்.

இப்பயிற்சியினால் எண் கூறக் குறள் கூறும் ஆற்றல் இயல்பாகவே வளரும். கேட்க நண்பர்கள் அருகில் இல்லையா? கவலைப்படாதீர்கள். சாலையில் ஓடுகிற வண்டிகளில் காணப்படும் எண்கள் பிற பலகைகளில் காணப்படும் எண்கள் இவற்றைப் பார்த்தவுடன் அவ்வெண்களுக்குரிய குறட்பாக்களை நீங்களே நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். உங்கள் ஊருக்குரிய அஞ்சல் குறியீட்டு எண் 621851 என வைத்துக் கொள்ளுங்கள். 1, 2, 5, 6, 8, 12, 15, 16, 18, 25, 26, 27, 621, 651, 158, 126, 261, 581, 218, 516, 625, 628, போன்று பல எண்களை நாமே உருவாக்கி அவ்வெண்ணுக்குரிய குறட்பா எது என்பதை நாமே நினைவுபடுத்திக் கொள்ளலாம். நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள இதுவும் ஒரு வழியாகும். முயற்சி திருவினை ஆக்கும் அல்லவா?

எட்டாம் படி:

உங்களுடைய திருக்குறள் கையேட்டில் அதிகார வரிசையில் எல்லாக் குறட்பாக்களின் முதற் சீரும் இறுதிச் சீரும் இருக்கின்றன. இவற்றிலிருந்து 'அ' முதல் ஒவ்வோர் எழுத்திலும் தொடங்கும் குறட்பாக்கள் எத்தனை எனத் தனித்தனியே கணக்கிடுங்கள். ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களும் எத்தனை எழுத்தில் தொடங்குகின்றன என அறியலாம். அவ்வாறே முடியும் எழுத்துக்களையும் கணக்கிடுங்கள். தொடங்கும் எழுத்தும், முடியும் எழுத்தும் ஒன்றாகவே அமைந்த குறட்பாக்களைக் கணக்கிடுங்கள். இவ்வாறு கணக்கிடும் போது 1330 குறட்பாக்களும் சரியாக இக்கணக்கில் இடம் பெற்றுள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். திருக்குறள் நூலில் கொடுக்கப்பட்டுள்ள அகர வரிசையைப் பார்க்காதீர்கள். நமது உழைப்பினால் பெறும் ஆற்றல்தான் நமக்கு நிறைவைத் தரும். எழுத்தை வைத்துக் கணக்கிடுவது போலச் சொல்லை வைத்துக் கணக்கிடுவதும் நம் நினைவாற்றலை மிகுதிப்படுத்தும். சான்றாக உலகு என முடியும் குறட்பாக்கள், படும் என முடியும் குறட்பாக்கள் என முடிகின்ற சீர்களை வைத்தும் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

ஒன்பதாம் படி:

இதுவரை திருக்குறள் முழுவதையும் பல்வேறு வகைகளில் பகுத்து நினைவில் வைத்துக் கொண்டீர்கள். இளமையிலேயே திருக்குறள் முழுமையும் மனனம் செய்து குறள்நெறிச் சான்றோராகத் திகழும் இளங்குமரனார், அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலையை நிறுவி, வாழும் வள்ளுவராகத் திகழ்பவர். 'திருக்குறள் வாழ்வியலுரை' எனத் திருக்குறளுக்கு உரைநூல் வெளியிட்டுள்ளார். இந்நூலை அடிப்படையாகக் கொண்டு குறளுக்குரிய பொருளை அறியுங்கள். ஒரு முறை படித்தாலே பொருள் புரிந்து விடும். காரணம், முன்னரே உள்ளத்தில் ஊறியுள்ளது தான்.

குறளைக் கூறியவுடன் பொருள் நினைவுக்கு வருமளவு பயிற்சி செய்யுங்கள். இப்பயிற்சியைப் பெற்றவுடன் குறள் கூறினால் பொருளைக் கூறலாம். பொருள் கூறினால் குறளைக் கூறலாம். ஆற்றல் மிக்கவர் அறிஞர் பலரின் உரைகளை எடுத்துக் கூறும் அளவுக்கும் பயிற்சியை வலிமைப்படுத்திக்

கொள்ளலாம். இப்பயிற்சிக்குத் 'திருக்குறள் உரை வேற்றுமை' என்ற தலைப்பில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆய்வு மையம் வெளியிட்டுள்ள நூல் துணை செய்யும். உரை வேற்றுமைகளை விளக்கித் தெளிவுபடுத்தியுள்ளவர், திருக்குறளில் தோய்ந்த பேராசிரியர் முனைவர் இரா. சாரங்கபாணி அவர்கள் ஆவார்.

பத்தாம் படி:

தற்போது பொருளுடன் திருக்குறள் முழுமையும் அறிந்துள்ளீர்கள். திருக்குறளில் பயின்று வரும் உவமைகள், அணிகள் இவற்றையும் அறிந்து வைத்திருந்தால் இலக்கண அடிப்படையில் கேட்பவர்களுக்கும் விடையளிக்க இயலும். இதற்குச் சென்னைப் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆய்வு மையம் வெளியிட்டுள்ள 'திருக்குறள் அணி நலம்' என்ற நூல் மிகவும் பயன்தரும். தக்க ஆசிரியர் வழி அறிந்தும் அணி நலப் புலமை பெறலாம். இவ்வாறு பல்லாற்றானும் ஓதி உணர்ந்து திருக்குறள் நெறியை வாழ்வியல் நெறியாகப் பின்பற்றுங்கள். சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லியை வள்ளுவர் வழியில் நீக்கலாம். யாதொன்றும் தீமையிலாத வாய்மையைப் பின்பற்றலாம். இவ்வாறு ஏற்றவைகளைப் பின்பற்றுவேன் என்ற உறுதியுடன் வள்ளுவர் வழியில் மற்றவர்கட்கு எடுத்துக் காட்டாகத் திகழுங்கள்.

காலமறிதல்: இப்படியெல்லாம் பத்துப் படிகளிலும் ஏறி முன்வரக் காலம் இல்லையே என்று சிலர் கவலைப் படலாம். காலம் பொன் போன்றது என்ற தொடர் தேர்வுக்கு மட்டுமன்று, நடைமுறையில் பின்பற்ற வேண்டிய தொடருமாகும். ஒவ்வொரு நாளும் காலை, மாலை அரைமணி நேரம் ஒதுக்கினாலே போதும் முறையான பயனைப் பெறலாம். பள்ளிக்குப் போகும் போதும், வரும்போதும் முன்னர் படித்தவற்றைச் சொல்லிப் பார்த்துப் பயிற்சியை வளர்த்துக் கொள்ளலாம். பேருந்தில் பயணம் செய்யும்போது புறக்கண் வேடிக்கை பார்த்து வந்தாலும், மனம் மட்டும் திருக்குறளை முதலில் இருந்து நிறைவு வரை நினைவு படுத்திக் கொண்டு வருமாறு பயிற்சி தரலாம். எப்போது நேரம் கிடைத்தாலும் கிடைக்கும் நேரத்தை இப்பயிற்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

முயன்றால் முடியாததில்லை. முயற்சி நமக்குப் பெருமையைத் தரும். நம்மால் முடியும் என்ற வலிவான உள்ள உறுதியுடன் செயல்படல் வேண்டும். முதலில் கொஞ்சம் தொல்லையாக இருந்தாலும் துவண்டு விடாமல், சோம்பலுக்கு இடந்தராமல் தொடர்ந்து முயன்று வெற்றியின் எல்லையை எட்டவேண்டும். வெற்றி முகட்டில் நிற்கும் போது ஏற்படும் மகிழ்ச்சி, முன்னர் ஏற்பட்ட தொல்லைகளையெல்லாம் மறக்கச் செய்துவிடும். எனவே நம்மிடம் உள்ள வலிமையை நன்கு உணர்ந்து முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பயனறிதல்: இவ்வாறெல்லாம் திருக்குறளில் நினைவாற்றல் பெறுவதானல் ஏற்படும் பயன் என்ன என்ற வினா எழலாம். திருக்குறள் நினைவாற்றலைப் பெற்றவர்கள் பெறற்கரிய பேறு பெற்றவர்கள். வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களையெல்லாம் திருக்குறள் வழியில் தீர்த்துக் கொள்பவர்கள். மன உறுதியும், நல்லியல்புகளும் வளர இவ்வாற்றல் துணை செய்யும். எத்தகைய கருத்துகளையும் நினைவில் இருத்தும் வலிமை வளர்கிறது. திருக்குறள் வழியே நடக்க வேண்டுமென்ற உறுதி ஏற்பட்டு அவ்வாறே செயல்படவும் தூண்டுகிறது. பிற இலக்கியங்களை எளிதில் புரிந்துகொள்ளவும், நினைவில் இருத்திக் கொள்ளவும் துணைசெய்கிறது. தம் கருத்துகளை மற்றவர்க்குத் தெளிவாக எடுத்துச் சொல்ல முடிகிறது. வையத்துள் வாழவாங்கு வாழப் பயன்தரும் இவ்வாற்றலைப் பெற்ற சான்றோர் பலர் இன்றும் உள்ளனர். அவர்களை வழிகாட்டியாகக் கொள்க.

பருவத்தே பயிர்செய்: இத்தகைய ஆற்றலை வளர்த்துக் கொள்ள இளமைப் பருவமே ஏற்ற பருவமாகும். எனவே, மாணவப் பருவத்திலேயே இத்தகைய பயிற்சியைக் குழந்தைகள் பெற, பெற்றோர் தூண்ட வேண்டும். பெற்றோர் தூண்டலிலும் வழிகாட்டலிலும் தான் குழந்தைகளின் அறிவு வளர்ச்சி, ஒழுக்கம்,

பண்பாடு அமைந்துள்ளன. எனவே, முறையான பயிற்சியைக் குழந்தை களுக்குத் தந்து வழிகாட்ட வேண்டுவது பெற்றோர் கடமையாகும். பின்பற்ற வேண்டுவது குழந்தைகளின் கடமையாகும்.

சுவைதரு செய்திகள்:

- க, கு, கை, சி, சு, தி, தீ, து, பு, ம, வா, வி, வை ஆகிய 13 எழுத்துக்களில் மட்டும் தொடங்கும் குறட்பாக்களும் முடியும் குறட்பாக்களும் உண்டு
- ஞா, பீ,போ, மை, மோ ஆகிய எழுத்தில் தொடங்கும் குறட்பா ஒவ்வொன்று மட்டுமே உண்டு அவை 484, 475, 693,836,90 ஆகியவை.
- முதலெழுத்தும் முடிவெழுத்தும் ஒன்றாய் அமைந்த குறட்பாக்கள் 6 உண்டு. அவை 391, 544, 604, 1025, 1187, 1218 ஆகியவை.
- தொடங்கும் சொல்லே முடியும் சொல்லாக அமைந்த குறட்பா மூன்று. அவை 200, 739, 751 ஆகியவை.

திருக்குறள் பயிற்சி ஆளுமை

திருக்குறள் தூயர் அ.கோபிசிங், தஞ்சாவூர், திருக்குறள் பணிகள்

முன்னுரை

சோழவள நாட்டில் தஞ்சை மாநகரின் கரந்தைப் பகுதியில் 08.06.1948 ஆம் ஆண்டு பிறந்தவர். இளங்கலை பொருளாதாரம் பயின்று வேளாண்மைத் துறையில் கண்காணிப்பாளராகப் பணியாற்றி 30.6.2006 பணி நிறைவு பெற்றவர். இவரது துணைவியார் சீவாபாய் ஆவார். இவருக்குமக்கட்பேறு இருவர். இவரது மூத்த மகள் கோ.சீ.சாலினி தன் கணவர் நெடுஞ்சேரலாதனுடன் கனடாவிலும்,இளைய மகள் கோ.சீ.பிரதீபா தன் கணவர் குமரனுடன் அமெரிக்காவிலும் பணிபுரிந்து வருகின்றனர்.

திருக்குறளை வாழ்வியல் நெறியாகக் கொண்டு ஒழுகிய இவர் தன் இரு மகள்களுக்கும் திருக்குறளைப் பயிற்றுவித்தார். இவரது இளைய மகள் கோ.சீ.பிரதீபா திருக்குறள்,நாலடியார்,நீதிநூல்கள் ஆகியவற்றை முழுமையாக மனனம் செய்து பதினாறு கவனகங்கள் செய்வதில் ஆற்றல் பெற்றார். தன் மகளின் திருக்குறள் கவனக நிகழ்ச்சிகளைப் பள்ளி, கல்லூரி மற்றும் பொது நிகழ்வுகளில் நடத்தி திருக்குறள் நெறிகளை அனைவரிடமும் கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டார். இவரது அயராத திருக்குறள் பரப்புப் பணியால் திருக்குறள் சான்றோர் பெருமக்களின் நன்மதிப்பையும்,பாராட்டையும் பெற்றார்.

“திருக்குறள் இல்லம்”

திருக்குறள் மேல் உள்ள பற்றின் காரணமாக, 1990 ஆம் ஆண்டு தனது இல்லத்திற்குத் "திருக்குறள் இல்லம்" எனப் பெயர் சூட்டினார். ‘குடிசெய்வார்க்கு இல்லை பருவம்’ என்னும் குறளுக்கேற்ப நல்ல நேரம்,கெட்ட நேரம் பார்ப்பது விடுத்து 'எல்லா நாளும் நல்ல நாளே' எனக் கொண்டு மார்கழி மாதத்தில் இல்லத் திறப்பு விழாவினைத் திருக்குறள் வழியில் நிகழ்த்தினார். நிகழ்வில் இவரது மகள் திருக்குறள் கோ.சீ.பிரதீபா 1330அருங்குறட்பாக்களையும் முற்றோதல் செய்தார். குளித்தலை இளமுருகு

பொற்செல்வி அவர்கள் திருக்குறள் இல்லத்தைத் திறந்து வைத்தார்கள். நிகழ்வில் தமிழ்க்கடல் இரா.இளங்குமரனார், குறள்ஞானி மோகனராசு, தென்னிலை கோவிந்தன் ஆ.வே.ரா, நாவை. சிவம், பழநிமாணிக்கம்,சிவசூரியன் படைஆளுநர் சுவாமிநாதன் மற்றும் பல திருக்குறள் சான்றோர் பெருமக்கள் பங்கு கொண்டு சிறப்பித்து இவரது திருக்குறள் பணிகளைப் பாராட்டியுள்ளனர். இவரது இல்லத்தின் முன்புறச் சுவர்களில் திருக்குறளின் சிறப்புகளை வண்ணத்தில் எழுதி வைத்துள்ளது இன்றளவும் பாராட்டப்படுகிறது.

திருவள்ளுவர் நாளும் இல்ல விழாவும்

ஆண்டுதோறும் திருவள்ளுவர் நாளை இல்ல விழாவாக 1990 ஆம் தொடர்ந்து ஆண்டுகளாகச் தொடங்கி, 34 ஆண்டுகளாக செய்து வருகிறார். திருவள்ளுவர் நாள் அன்று *1330* அருங்குறட்பாக்களையும் இவரது வீட்டில் ஒலிப்பெருக்கியில் திருக்குறள் ஒலித்துக் கொண்டே இருக்கும்.திருக்குறள் அட்டைகள் இல்லத்தின் முகப்பில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். மாணவச் செல்வங்கள் முற்றோதல் செய்து முடிப்பார்கள். அனைவரும் திருக்குறள் வழி வாழ உறுதி மேற்கொள்வார்கள். திருக்குறள் சான்றோர் பெருமக்கள் வாழ்த்துரைப்பர். இதன்பின்னர் விருந்தோம்பல் நிகழ்வு இனிதே நிகழ்வுறும். அனைத்து நிகழ்வுகளையும் திட்டமிட்டு செய்து முடிப்பார். தஞ்சை கரந்தைப் பகுதியில் பெரிய அளவில் திருவள்ளுவர் ஊர்வலத்தை இருமுறை நடத்தி மக்களிடம் திருக்குறள் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

மணிக்கு மணி குறளும் பொருளும் கூறும் ஒலிப்பெருக்கி

இவரது இல்லத்தின் மேல் பகுதியில் நேரமும்,குறளும் பொருளும் கூறும் ஒலிப்பெருக்கியை அமைத்துத் தான் வாழும் பகுதியில் மணிக்கு மணி குறள் ஒலிக்கச் செய்துள்ளார்.

குறளும் பொருளும் நாளும் எழுதுதல்

கடந்த 34 ஆண்டுகளாக நாள்தோறும் குறளும் அதற்குரிய பொருளும் இல்ல முகப்பில் எழுதிப் பொதுமக்கள் பார்வைக்கு வைத்து வருகிறார்.மேலும் இவரிடம் திருக்குறள் பயின்ற மாணவச் செல்வங்களும் இவரைப் பின்பற்றி இப்பணியை நாள்தோறும் செய்து வருகின்றனர்.

திருக்குறள் வழியில் இல்ல நிகழ்வுகள்

பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து நிகழ்வுகளையும் திருக்குறள் வழியில் 1330 அருங்குறட்பாக்களையும் முற்றோதல் செய்து திருவள்ளுவரை வணங்கி நிகழ்த்தி வருகின்றார். இவரது இரு மகள்களின் திருமணமும் 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் வள்ளுவத்தின் வழியில் சாதி மறுப்புத் திருமணமாக, தமிழ்க்கடல் இரா.இளங்குமரனார் மற்றும் குறள்ஞானி பேராசிரியர் கு.மோகனராசு அவர்களின் தலைமையில் திருக்குறள் வழியில் நடைபெற்றது. மேலும் இவரிடம் திருக்குறள் பயிலும் மாணவச் செல்வங்களும் இவரின் வாழிகாட்டுதலை ஏற்று தங்கள் இல்ல நிகழ்வுகளையும் திருக்குறள் வழியில் நடத்தி வருவது இவரது முயற்சிக்குக் கிடைத்தப் பயனாகும்.

திருக்குறள் வகுப்பு

இவரும் இவரது துணைவியாரும் தங்கள் இல்லத்திற்கு மாணவச் செல்வங்களை அழைத்துத் திருக்குறளைப் பயிற்றுவித்து வந்தனர். 2010 ஆம் ஆண்டு இவரது துணைவியார் மறைவுற்றார்.இவரது மகள்கள் இருவரும் திருமணத்திற்குப் பின் பணி நிமித்தமாக வெளிநாடு சென்ற நிலையில் இவரது திருக்குறள் பணிகளைச் செவ்வனே செய்ய தக்கத் துணையின்றி இருந்துள்ளார். எனினும் மனம் கலங்காது தன் துணைவியாரின் நினைவைப் போற்றும் வண்ணம் அருங்குறட்பாக்களையும் தமது 65 ஆம் அகவையில் மனனம் செய்துள்ளார். தற்போது புலனத்தில் 'தஞ்சை திருக்குறள் முற்றோதல் பயிற்றகம்' என்னும் குழுவை ஏற்படுத்தி கைப்பேசி மூலமாகவே திருக்குறளைப் மாணவச் செல்வங்களுக்குப் பயிற்றுவித்து வருகிறார். இவரிடம் பயின்ற 44 மாணவச் செல்வங்கள் தமிழ்நாடு

அரசின் முற்றோதல் பரிசினைப் பெற்றுள்ளனர். தற்போது (23-24 கல்வியாண்டு) 60 மாணவச் செல்வங்கள் இவரிடம் திருக்குறள் பயின்று வருகின்றனர். மாணவர்களிடம் இவர் எவ்விதக் கட்டணமும் பெறுவது இல்லை. மாறாக மாணவச் செல்வங்களுக்குப் பரிசுகள் வழங்கி முழுமையாக மனனம் செய்து முடித்தப்பின் ஒவ்வொருவருக்கும் விருதும், ரூ.1330/- பரிசுத் தொகையும் வழங்கி சிறப்பிக்கின்றார்.

இவரது தன்னலமற்ற திருக்குறள் பணியைக் கண்டு மகிழ்ந்து அரசுப் பள்ளி மாணவச் செல்வங்களுக்கு இலவசத் திருக்குறள் முற்றோதல் பயிற்சி வழங்கி வரும் 'தமிழ்நாடு முற்றோதல் இயக்கம்' இவரை ஐந்து மாவட்டங்களுக்குத் திருக்குறள் மண்டலத் தலைமைப் பயிற்றுநராக நியமித்துச் சிறப்பித்துள்ளனர். இதன் பயனாக இவ்வாண்டு இவரிடம் பயிற்சிப் பெற்ற 17 மாணவச் செல்வங்கள் தமிழ்நாடு அரசின் குறள் பரிசினைப் பெற பதிவு செய்துள்ளனர். இவ்வாண்டு உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் தஞ்சை மாவட்டத்திற்கு வழங்கிய 1000 திருக்குறள் நூல்களை 33 பள்ளி மாணவச் செல்வங்களுக்கு மாவட்ட ஆட்சியர் மூலம் வழங்கி மாணவர்கள் திருக்குறள் கற்றலை ஊக்குவித்து உள்ளார்.

உலகத் திருக்குறள் மையத் தொடர்பு

திருக்குறளை வாழ்வியலாக ஏற்று 1990ஆம் ஆண்டில் இருந்து உலகத் திருக்குறள் மையத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறார். இவரை மேன்மேலும் ஊக்குவித்து வழி நடத்திச் செல்பவர் உலகத் திருக்குறள் மைய நிறுவனர் குறள் ஞானி பேராசிரியர் கு.மோகனராசு ஆவார். திருக்குறள் தூதருக்கான பத்துக் கட்டளைகளை இவர் ஏற்றுச்செயல்பட்டதால் இவருக்குத் " திருக்குறள் தூதர்" என்னும் உயர் பொறுப்பினை வழங்கி இவரது திருக்குறள் பணிகளை விரைவுபடுத்தினார். இவரது திருக்குறள் பணிகளைப் பாராட்டி உலகத் திருக்குறள் மையம் இவருக்குத் திருக்குறள் வளர் ஆசான், திருக்குறள் மார்கழி மாமணி, திருக்குறள் புரவலர் , ஆய்வு மணி, ஆய்வு மாமணி , ஆய்வுச் செம்மல் , நூல் ஆய்வு செம்மல், என்னும் விருதுகளை வழங்கி பாராட்டியுள்ளது. மேலும் மிக உயரிய விருதுகளான "திருவள்ளுவர்விருதினை" 12.4.21 அன்றும் "திருக்குறள் தூயர்" விருதினை 15.1.22 அன்றும் வழங்கி சிறப்பித்துள்ளது.

தஞ்சாவூர் திருக்குறள் பேரவை குறள்நெறிச் செம்மல் விருதும், வைரிச்செட்டிப்பாளையம் திருக்குறள் பேரவை வள்ளுவம் பரப்பும் வள்ளல் விருதும், மணற்பாறை திருக்குறள் பயிற்றகம் திருக்குறள் செம்மல் விருதும்,தஞ்சாவூர் தமிழ்த்தாய் அறக்கட்டளை குறள் நெறிக் காவலர் விருதும், தஞ்சை உலகத் திருக்குறள் கழகம் குறள் ஆசான் விருதும், திருவையாறு ஔவை அறக்கட்டளை வான்புகழ் வள்ளுவர் விருதும் வழங்கி பாராட்டியுள்ளன.

இல்லத்தில் திருவள்ளுவர் சிலையும், மண்டபமும் திறப்பு

வான்புகழ் திருவள்ளுவருக்குத் தனது இல்லத்தில் சிலையும், மண்டபமும் அமைக்கத் திட்டமிட்டார். சிலை அமைப்புப் பணி நடைபெற்ற 31 நாட்களும் 1330 அருங்குறட்பாக்களை நாள்தோறும் முற்றோதல் செய்தார். திருவள்ளுவர் ஆண்டு 2053 திருவள்ளுவர் நாள் தை 2ஆம் நாள் 15.1.2022 அன்று ஊர்வலம் மற்றும் சான்றோர் பெருமக்களின் வாழ்த்துரையோடு திருவள்ளுவர் சிலையும், மண்டபமும் செம்மொழி விருதாளர் முனைவர் கு.சிவமணி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஆண்டுதோறும் திருவள்ளுவர் நாள் இல்லத்தில் சிறப்பாக நடைபெறவேண்டும் என்ற நோக்கில் திருக்குறள் அறக்கட்டளைஒன்றையும் நிறுவியுள்ளார்.

முடிவுரை

திருக்குறள் தூயர் அ.கோபிசிங் அவர்கள் திருக்குறளைக் கற்றல்,கற்பித்தல், அதன் வழி நிற்றல், குறள் நெறி பரப்புதல் என்ற பல்வேறு நிலைகளில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி அனைவரின் நன்மதிப்பை பெற்றுள்ளார். நாமும் அவர் வழி நின்று நாளும் திருக்குறள் கற்று,அதன் வழி வாழ்ந்து புதியதோர் திருக்குறள் சமுதாயம் அமைத்திடுவோம்.

தொகுப்பு: நெடுஞ்சேரலாதன், கனடா

திரும்பிப் பார்க்கிறோம்..

சென்ற இதழ் குறித்த பின்னூட்டம்

பேராசிரியர் முனைவர் மு.இளங்கோவன்:

குறள்வழி அரிய தகவல்களைக் கொண்டு வழிவந்துள்ளது.

முனைவர் மறைமலை இலக்குவனார்:

குறள்வழி இதழ் வெளியீட்டுப் பணி சிறக்க மனங்கணிந்த வாழ்த்துக்கள். குறள்நெறி மின்னிதழ் தொடங்கி மூன்றாண்டு நிறைவெய்தும் வேளையில் இப்படி ஒரு சிறப்பான இதழ் வெளிவருவது மகிழ்ச்சி அளிக்கிறது. மேலும் காலப்பணியில் முனைந்து சிறார்கள் உள்ளங்களில் குறளமுது நிறைந்திட செயலாற்றுதல் பாராட்டுக்கு உரியது.

பேராசிரியர் துரை.குணசேகரன் மாநிலத்தலைவர் தமிழ் ஆராய்ச்சியாளர் பேரவை:

திருக்குறளின் பரவலுக்காக பல்வேறு முயற்சியினை எடுத்துவரும் தாங்கள் தற்போது குறள்வழி என்னும் பெயரில் இதழொன்று வெளியிட்டிருப்பதற்கு மிக்கமகிழ்ச்சி. உலகெங்கும் வாழும் தமிழ்மக்களின் வாழ்க்கைத்தரம் உயர இந்த இதழ் பல்லாண்டு வெளிவரவேண்டும் என த்தமிழ் ஆராய்ச்சியாளர் பேரவையின்சார்பில் வாழ்த்துகின்றேன்...

நவில்தொறும் நூல்நயம்



திருக்குறள் தற்சார்பு

எங்கள் மாவட்டம்-எங்கள் பொறுப்பு, எங்கள் மாவட்டப் பயிற்சியாளர், எங்கள் மாவட்டத்தில் திருக்குறள் முற்றோதல் செய்த ஒருவருக்கு வேலை, எங்கள் மாவட்ட அறம்சார் புரவலர் திருக்குறளுக்கு முன்வருபவரை, அவரது வணிகத்தை நாங்கள் நாங்கள் முன்னிறுத்துவோம், எங்கள் மாவட்ட மாணவர்கள் பயன்பெறுகிறார்கள், எங்கள் மாவட்ட திருக்குறள் ஆளுமைகள் வழிகாட்டுகிறார்கள், எங்கள் மாவட்ட அரசு நிர்வாகத்துடன் இணைந்து அரசின் பரிசினைப் பெற அதிக மாணவர்கள் திருக்குறள் படிக்கிறார்கள், எங்கள் மாவட்டத்தில் படித்து வெளிநாடு சென்றவர்கள் எங்கள் மாவட்டத்தில் திருக்குறள் படித்தவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, வெளிநாட்டு மாணவர் பயணம் என்று பலவகையில் துணைநிற்கிறார்கள்.

திருக்குறள் புரவலராக உங்கள் மாவட்டத்தில்பொறுப்பேற்க அழைக்கிறோம்..

ஏற்கனவே பொறுப்பேற்றுள்ள புரவலர்களுக்கு நன்றி...!! நன்றி.. !!

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் நன்கொடை பெறுவதில்லை. செயல்பாடுகளை கண்டறிந்து அறம் சார்ந்த மனிதர்கள், நிறுவனங்கள் அந்தந்த மாவட்டத்திலிருந்து அவர்கள் சார்ந்த மாவட்டத்தின் புரவலர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல், பரிசளித்தல், பகுதிநேர, முழுநேர திருக்குறள் முற்றோதல் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத்தொகையை நேரடியாக வழங்குதல் உள்ளிட்டவற்றிற்கு அந்தந்த மாவட்டத்திலிருந்து "திருக்குறள் புரவலர்கள்" தேவை.

Ariyalur அரியலூர் Your Photo / Business Photo	Chengalpattu செங்கல்பட்டு **மணி பெரியகருப்பன்,** Ohio, USA	Chennai சென்னை Your Photo / Business Photo	Coimbatore கோயம்புத்தூர் Your Photo / Business Photo
Cuddalore கடலூர் Your Photo / Business Photo	Dharmapuri தர்மபுரி Your Photo / Business Photo	Dindigul திண்டுக்கல் Your Photo / Business Photo	Erode ஈரோடு Your Photo / Business Photo

Kallakurichi கள்ளக்குறிச்சி Your Photo / Business Photo	Kanchipuram காஞ்சிபுரம் Your Photo / Business Photo	Kanyakumari கன்னியாகுமரி Your Photo / Business Photo	Karur கரூர் **க.செங்குட்டுவன்** Valluvar Science and Management College
Krishnagiri கிருஷ்ணகிரி Your Photo / Business Photo	Madurai மதுரை Your Photo / Business Photo	Mayiladuthurai மயிலாடுதுறை **ஜெனீபர் பவுல்ராஜ்**	Nagappattinam நாகப்பட்டினம் Your Photo / Business Photo
Namakkal நாமக்கல் Your Photo / Business Photo	Perambalur பெரம்பலூர் Your Photo / Business Photo	Pudukkottai புதுக்கோட்டை Your Photo / Business Photo	Ramanathapuram இராமநாதபுரம் Your Photo / Business Photo
Ranipet இராணிப்பேட்டை Your Photo / Business Photo	Salem சேலம் **தங்கராசு பெரியசாமி**	Sivagangai சிவகங்கை Your Photo / Business Photo	Tenkasi தென்காசி Your Photo / Business Photo
Thanjavur தஞ்சாவூர் Your Photo / Business Photo	The Nilgiris நீலகிரி Your Photo / Business Photo	Theni தேனி Your Photo / Business Photo	Thirupattur திருப்பத்தூர் Your Photo / Business Photo

Tiruvallur திருவள்ளூர் Your Photo / Business Photo	Tiruvannamalai திருவண்ணாமலை Your Photo / Business Photo	Tiruvarur திருவாரூர் **திரு. இளங்கோ, சிங்கப்பூர்**	Vellore வேலூர் Your Photo / Business Photo
Viluppuram விழுப்புரம் Your Photo / Business Photo	Virudhunagar விருதுநகர் Your Photo / Business Photo	Pondicherry புதுச்சேரி **தலைவர், புதுவைத் தமிழ்ச்சங்கம்**	Karaikkal காரைக்கால் Your Photo / Business Photo

திருக்குறளில் ஆர்வமுள்ளவரா? எமது செயல்பாட்டில், திருக்குறள் பரவலாக்கல் முயற்சியில் நம்பிக்கை உள்ளவரா? உங்கள் அறம் சார்ந்த வணிகத்தை விளம்பரம் செய்து பயனடைவீர். பல லட்சம் பேருக்குமேல் சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட பல வழிகளில் பகிரப்படுகிறது.

தொடர்புக்கு: *Kural.Murothal@gmail.com*

வள்ளுவமும் வலைத்தமிழும்

வலைத்தமிழ் தனித்து அல்லது பிற அமைப்புகளுடன் இணைந்து முன்னெடுத்துள்ள திருக்குறள் சார்ந்த 24 பரவலாக்கல் திட்டங்களை ஒரே இடத்தில் காண: **www.Thirukkural.ValaiTamil.com**

திருக்குறள் நூல்கள் வழங்கிய மாவட்டங்களின் விவரம்

மாவட்டங்களுக்கு சுமார் 1000 திருக்குறள் நூல்கள் வரை அனுப்பப்பட்டு மாவட்ட அரசு நிர்வாகத்துடன் இணைந்து வழங்கப்பட்டது.

எண்	மாவட்டம்	நூல் வழங்கப்பட்டதா?	பயிற்சியாளர்
1	Dharmapuri தர்மபுரி	ஆம்	
2	Tiruvallur திருவள்ளூர்	ஆம்	
3	Tirunelveli திருநெல்வேலி	ஆம்	
4	Tiruvannamalai திருவண்ணாமலை	ஆம்	திரு .க.காமராசு
5	Kallakurichi கள்ளக்குறிச்சி	ஆம்	புலவர். ஐயா மோகன்
6	Cuddalore கடலூர்	ஆம்	
7	Chennai சென்னை	ஆம்	திரு. க.கோ.பழனி
8	Dindigul திண்டுக்கல்	ஆம்	திரு. வெ.செல்வன்
9	Karur கரூர்	ஆம்	
10	Mayiladuthurai - மயிலாடுதுறை	ஆம்	திரு. சரவணன்
11	Thanjavur தஞ்சாவூர்	ஆம்	திரு. கோபிசிங், திருமதி. ச.ஆனந்தி
12	Namakkal நாமக்கல்	ஆம்	திரு. க.காமராசு
13	Pondicherry - புதுச்சேரி	ஆம்	திருமதி. சங்கீதா கண்ணன்
14	Vellore வேலூர்	ஆம்	
15	Viluppuram விழுப்புரம்	ஆம்	
16	Kanyakumari கன்னியாகுமரி	ஆம்	கவிஞர். தமிழ்க்குழவி
17	Tiruchirappalli திருச்சி	ஆம்	
18	Tenkasi தென்காசி	ஆம்	திரு.ஸ்ரீ தர்
19	Pudukkottai புதுக்கோட்டை	ஆம்	திரு. தங்கமணி
20	Salem சேலம்	ஆம்	திரு. க.காமராசு
21	Thirupattur திருப்பத்தூர்	ஆம்	
22	Perambalur பெரம்பலூர்	ஆம்	
23	Ariyalur அரியலூர்	ஆம்	
24	The Nilgiris நீலகிரி	ஆம்	
25	Tiruvarur திருவாரூர்	நூல்சென்றது	
26	Madurai மதுரை	ஆம்	
27	Nagappattinam நாகப்பட்டினம்	நூல்சென்றது	
28	Ramanathapuram இராமநாதபுரம்	நூல்சென்றது	
29	Chengalpattuசெங்கல்பட்டு	ஆம்	திரு. த.தமிழ்மகிழ்நன்,திருமதி. கற்பகவள்ளி,திருமதி.சிந்தாமணி
30	Coimbatore கோயம்புத்தூர்	நூல்சென்றது	முனைவர்.மோகனசுந்தரம்
31	Tiruppur திருப்பூர்	நூல்சென்றது	
32	Kanchipuram காஞ்சிபுரம்	ஆம்	திரு. குறள்அமிழ்தன்,
33	Virudhunagar விருதுநகர்	ஆம்	
34	Theni தேனி	ஆம்	
35	Erode ஈரோடு	நூல்சென்றது	
36	Sivagangai சிவகங்கை	ஆம்	திரு. ஜெயம்கொண்டான்
37	Ranipet இராணிப்பேட்டை	நூல்சென்றது	
38	Thoothukudi தூத்துக்குடி	நூல்சென்றது	
39	Krishnagiri கிருஷ்ணகிரி	நூல்சென்றது	
40	Karaikal -காரைக்கால்	இல்லை	

திருக்குறள் நூல்கள் அறிவோம்..



"Valluvar's Answers to Vital Questions".
முனைவர் இரா.பிரபாகரன்,
எமராலடு பதிப்பகம், முதல் பதிப்பு **2023** மொத்த பக்கங்கள் **740,**
விலை ரூபாய் **900**



"Thirukkural-"A Snapshot of the Sastras?"
முனைவர்.கதிரவன் கிருஷ்ணமூர்த்தி
மின்கவி பதிப்பகம், முதல் பதிப்பு **2023,** விலை **$16,**
மொத்த பக்கங்கள் **190**



"புதுக்கவிதையில் காமத்துப்பால்"
ஆசி கண்ணம்பிரத்தினம். ஆறுமுகன் பப்ளிகேஷன்ஸ், முதல் பதிப்பு **2000,**
விலை ரூபாய் **35,** மொத்த பக்கங்கள் **156**

திருக்குறளில் தேன் கதைகள், அரிமா புலவர் ந.நாகராஜன்
காவேரி பதிப்பகம்,
முதல் பதிப்பு **2000,**
விலை ரூபாய் **35,**
மொத்த பக்கங்கள் **170**

"எப்சிபா குறலின் விளக்கம்"
பாவலர் வி.பி.மாணிக்கம்,
கிரிஜா பதிப்பகம், முதல் பதிப்பு **2012,**
விலை ₹**117,** மொத்த பக்கங்கள் **276**

"திருக்குறள் கதை களஞ்சியம்"
பொருட்பால் தொகுதி ஒன்று,
பெரியண்ணன், ஜோதி புக் சென்டர்,
முதல் பதிப்பு **2017,** பக்கங்கள் **750,**
விலை ரூபாய் **665**

திருக்குறள் புரவலர்களுக்கு நன்றி...

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்திற்கு ஒரு தமிழ் பேராசிரியரை தொடக்கத்தில் பகுதி நேரமாகவும், தேவையானால் முழு நேரமாகவும் வழங்கி, "குறள் வழி" திருக்குறள் மாத இதழ் அட்டைப்பட விளம்பரமாக மாதம் ரூபாய் **10000** வழங்கி ஆதரவு அளிக்கும் வள்ளுவர் அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரிக்கும், அதன் தாளாளர் திரு.செங்குட்டுவன் அவர்களுக்கும் உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்விதழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், பயிற்சியாளர்களுக்கு அச்சுப்பிரதியாக இலவசமாக சென்று சேரவேண்டும் என்று புரவலராக தன்னை இணைத்துக்கொண்ட நாமக்கல் நண்பர் திரு.கதிரவன் செழியன் அவர்களுக்கு உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி... நன்றி...



திருக்குறள் முற்றோதல் முடித்தவர்கள்

மாணவர் பெயர் | நாடு: Select | மாநிலம்: Select | SEARCH

பதிவு செய்ய

#	மாணவர் எண்	பெயர்	நாடு	மாநிலம்	மாவட்டம்	ஆண்டு
1.	331	ச.கோபிகா	India	Tamil Nadu	tiruchirappalli	2022
2.	330	மு. நிஷார்னியா	India	Tamil Nadu	thanjavur	2022
3.	329	க. சந்தான லட்சுமி	India	Tamil Nadu	kanyakumari	2022
4.	328	சு.சுசாந்திகா	India	Tamil Nadu	viluppuram	2015
5.	327	சு.சுசாந்திகா	India	Tamil Nadu	viluppuram	2015
6.	326	ர. செஞ்சோலை	India	Tamil Nadu	viluppuram	2022
7.	325	ஸ்ரீ .ஸ்ரீ வர்ஷன்	India	Tamil Nadu	nagapattinam	2022
8.	324	சீ. யாழ்த்தமிழ்	India	Tamil Nadu	viluppuram	2022
9.	323	டே.ஜான் டேவிட்	India	Tamil Nadu	kanyakumari	2022
10.	322	இரா.ராஜ்குமார்	India	Tamil Nadu	theni	2015

இதுவரை உலக அளவில் திருக்குறளை முழுமையாகப் படித்து முற்றோதல் செய்துள்ளவர்கள் யார்? ஆவணப்படுத்த புதிய இணையதளம்..

2000 வது ஆண்டில் திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கும் திட்டத்தை அரசு தொடங்கியது. கடந்த 23 ஆண்டுகளில் தமிழ்நாடு முழுதும் சுமார் 812 பேர் 1330 திருக்குறளையும் கூறி பரிசு பெற்றுள்ளார்கள் என்று தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர்.அவ்வை அருள் தெரிவித்துள்ளார். 14.04.1972 முதல் இயங்கிவரும் திருச்சி திருமூலநாதன் அறக்கட்டளை 01.05.1998 முதல் 26 ஆண்டுகளாக திருக்குறள் ஒப்பிடுதல் போட்டியை நடத்திவருகிறது. அவர்கள் வழங்கும் 2000 ருபாய் பரிசைப் பெற்றவர்கள் 400 பேருக்கு மேல் உள்ளனர். இதுபோல் வேறு அமைப்புகளும் செய்துகொண்டிருக்கலாம். அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளில் முற்றோதல் செய்தவர்கள் பலர் உள்ளனர்.

இவர்களை ஒரு குழுமமாக தொகுத்து வெளியிடுவதும், இவர்களுக்கு அனைத்திலும் தமிழ்ச்சமூகம் கல்வி, வேலைவாய்ப்பு, மேடைவாய்ப்பு, பொருளாதார வாய்ப்பு, தொழில் உள்ளிட்ட அனைத்திலும் முன்னுரிமை வழங்கவும் உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் ஒரு சிறப்பு இணையதள வசதியை ஏற்படுத்தி ஆவணப்படுத்தி வெளியிடுகிறது. உங்களுக்குத் தெரிந்தவர்களை பதிவு செய்ய இங்கு செய்யவும்.

முதல்கட்டமாக இவர்கள் அனைவர்க்கும் உலகத்திருக்குறள் முற்றோதல் இயக்கம் சார்பில் திருக்குறள்-இளநிலை சான்றிதழ் வழங்கி, பொருள் உணர்ந்து படித்துள்ளவர்களை அடையாளம் கண்டு திருக்குறள்-முதுநிலை சான்றிதழ் வழங்கவிருக்கிறோம். இளநிலை முடித்தவர்கள் , முதுநிலை படிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

https://www.valaitamil.com/mutrothal-students-register-list.php

or www.Thirukkural.ValaiTamil.com

பிறந்தநாளை தமிழில் பாடி கொண்டாடுவோம்..

நீண்ட நீண்ட காலம்... எனத் தொடங்கும்
தமிழ் பிறந்தநாள் பாடல்..

பாடல் : பாவலர் அறிவுமதி
இசை : அரோல் கரோலி
குரல் : உத்தரா உன்னிகிருஷ்ணன்
தயாரிப்பு : வலைத்தமிழ் ச.பார்த்தசாரதி

நல்ல தமிழ்ப்பெயரை பிள்ளைகளுக்கு சூட்டுவோம்

தமிழில் பெயர் வைக்காததற்கு இனி காரணம் இல்லை. வாருங்கள் பொருள் பொதிந்த,
இனிய தமிழ்ப்பெயரைச் சூட்டுவோம் !! தமிழ் அடையாளம் காப்போம் !!

உலகத் தமிழ்ப்பெயர்கள் பேரியக்கம்

www.BabyName.ValaiTamil.Com || BabyName.ValaiTamil@gmail.com
சிறப்புக் கைபேசி / புலன எண்: +91 868 100 2229 (BABY)

உலக மொழிகளில் திருக்குறள்
மொழிபெயர்ப்புத் தொகுப்புத் திட்டம்

சிகாகோவில் உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை நிறுவி, திருக்குறள் (தமிழ்ப் பண்பாட்டுக் கையேடு) என்ற நூலை கொண்டுவந்த அமெரிக்கத் தமிழர் முனைவர். அழகப்பா இராம்மோகன் அவரது நினைவாக இத்திட்டத்தை வலைத்தமிழ் அறிவித்து அமெரிக்காவை மையமாகக் கொண்டு ஒரு தன்னார்வக் குழு அமைத்து மொழிபெயர்ப்புகளை தொகுத்து வருகிறது. வள்ளுவர் குரல் குடும்பம் இத்திட்டத்தில் இணைந்து நூல்கள் திரட்டலை வேகப்படுத்தியுள்ளது. மொழிபெயர்ப்புத் தொகுப்புப் பணிகள் முழுமையாக முடிந்து உலகத் தமிழ்ச் சமூகத்திற்கு முழு விவரங்களும் பகிரப்படும்.



இதுவரை வெளிவந்த அனைத்து நூல்களும் அடையாளம் காணப்பட்டு அச்சு நூல்கள் சென்னைக்கு வரவழைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் துணைநின்ற அனைவரது உதவிகளும், பங்களிப்பும் முறையாகப் பதிவுசெய்யப்படும்.

கீழ்காணும் மொழிகளில் மட்டுமே எங்களுக்கு இன்னும் மொழிபெயர்ப்புகள் அடையாளம் காணப்பட்டு நூல்கள் தேடப்பட்டு வருகிறது. மற்றவை தொகுப்பில் சேர்ந்துவிட்டது.

1. Burmeze (Identified) 2. Czech 3. Dutch 4. Finnish 5. Italian (Italiano) 6. Konkani 7. Polish 8. Rajasthani
9. Russian 10. Spanish 11. Hungarian 12. Assamese 13. Brahui 14. Santhali 15. Garo 16. Armenian
17. Tok pisin

மேலே உள்ள திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல்களைத் திரட்டி இத்திட்டத்திற்கு உதவ அன்புகூர்ந்து எங்களை தொடர்புகொள்க.

E-Mail: Thirukkural@ValaiTamil.com
Whatsapp: +1 5715996029 (USA)

திட்ட ஒருங்கிணைப்பாளர்:
வலைத்தமிழ் ச.பார்த்தசாரதி

திட்டக் குழு:
திரு.இளங்கோவன் தங்கவேலு, USA (முன்னாள்) || திரு.சி.இராசேந்திரன், IRS (ஓய்வு) ||
மருத்துவர் N.V.அஷ்ரப் ஜுஞைது || திரு.செந்தில் துரைசாமி, (USA) || திரு. அஜய்குமார் செல்வன், (சென்னை)

வள்ளுவர்

அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரி

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது

தேசிய தர நிர்ணயக் குழுவின் A+ சான்றிதழ் பெற்றது. (முதல் சுழற்சி)

கரூர் –மதுரை தேசிய நெடுஞ்சாலை , புதாம்பூரி அஞ்சல் , கரூர் மாவட்டம் , தமிழ்நாடு– 639003

ஞான-விஞ்ஞான விமுக்தயே
2(f) & 12(B) status by UGC

குறள் சொல்வோம்..!
குறள் வழி வாழ்வோம்..!

A+ GRADE ACCREDITED BY NAAC

AICTE

மாணவ- மாணவியர்களுக்கு ஓர் இனிய செய்தி

2024-2025 ஆம் கல்வியாண்டில் நமது வள்ளுவர் கல்லூரியில் சேரும் மாணவ மாணவியர்களுக்கு மூன்றாண்டுகளுக்கும் இலவசக் கல்வி!

- 500 திருக்குறள்களை ஒப்புவித்தால் ஒரு வருடம் கல்லூரிக் கட்டணம் இலவசம்.
- 1000 திருக்குறள்களை ஒப்புவித்தால் இரண்டு வருடம் கல்லூரிக் கட்டணம் இலவசம்.
- 1330 திருக்குறள்களை ஒப்புவித்தால் மூன்றாண்டும் கல்லூரிக் கட்டணம் இலவசம்.

COURSES OFFERED

UNDER GRADUATE PROGRAMMES:
- B.A. English
- B.A. Tamil
- B.A. Public Administration
- BBA
- B.Com
- B.Com. (Computer Applications)
- B.Com. (Professional Accounting)
- BCA
- B.Sc. Computer Science
- B.Sc. Fashion Technology & Costume Designing
- B.Sc. Hotel Management & Catering Science
- B.Sc. Mathematics
- B.Sc. Physics

POST GRADUATE PROGRAMMES:
- M.A. English
- M.Com. (Computer Applications)
- M.Sc. Computer Science
- M.Sc. Mathematics

RESEARCH PROGRAMMES:
- M.Phil. Commerce
- Ph.D. Commerce

DIPLOMA COURSES:
- Diploma in Food Production
- Diploma in Banking & Finance

PROFESESSIONAL PROGRAMME
- M.B.A

@ valluvarcollege @VCSM Events www.vcsm.ac.in 9944450507 / 9791726481 / 9791736481